பு.சா.1. பழனி த/பெ. பொன்னன், வயது.40, பெரும்பள்ளி, திருப்பத்தூர்.

**<u>சாட்சி மனுவின் பெயரில் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது புகாரில் ஜோன்றம்பள்ளி என்ற ஊரைச் சேர்ந்த ஓட்டுனர் டிராக்டரை ஓட்டியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. அவரின் பெயர் எனக்குத் தெரியாது. நான்தான் அவரை அழைத்து வந்தேன். நான் டிராக்டர் ஓட்டியதாக சொல்லியுள்ள நிலம் தொடர்பாக, திருப்பத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த நிலம் தொடர்பாக 2004–இல் எனது தாயார் பரமேஸ்வரி வழக்குத் தொடர்ந்து அது 2010–இல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். எதனால் என்று எனக்குத் தெரியாது. அது டிஸ்போஸ் ஆகிவிட்டது. 2016–இல் நான் மீண்டும் அதே நிலத்திற்காக வழக்குத் தொடர்ந்துள்ளேன். போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு அடிபட்ட உடனே எனது ஊர்க்காரர்கள் எனக்கு முதலுதவி செய்தார்களா என்றால், ஆம்புலன்ஸ் வரும் வரை எனக்கு எந்தவித முதலுதவியும் செய்யப்படவில்லை. என்னுடன் ஆம்புலன்சில் எனது தாயாரும், மனைவியும் வந்தார்கள். எனக்குக் காயம்பட்டபோது அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால், அடிபட்டபிறகுதான் எனது ஊரார்கள் அங்கு வந்தார்கள். எனது அம்மாவிற்கு பொன்னன் தாய்மாமா என்றால் சரிதான். நான் எத்தனை நாட்கள் மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தேன் என்றால் 10 நாட்கள். போலீசார் என்னை எத்தனை முறை மருத்துவமனையில் வந்து பார்த்தார்கள் என்றால், எனக்கு நினைவில்லை. அவ்வப்போது வந்து

பார்த்தார்கள். முதல் விசாரணையில் என்னிடம் காட்டப்பட்ட சா.பொ.1 கத்தியைப் போன்று எங்கள் ஊரில் அனைவரின் வீட்டிலும் உள்ளது என்றால் சரிதான். நான் தொடுத்துள்ள உரிமையியல் வழக்கிற்காக இப்பொய்யான குற்றவியல் வழக்கை எதிரிகளின் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேஸ்திரி வேலை செய்தபோது ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளின் மீது பொய்ப்புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடித்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை:-**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,

Tirupathur.